செ.வெ.எண்: 666 நாள்: 19.11.2020

**உயிர்கள், பொது சொத்துக்களை காப்பாற்றுதல் உள்ளிட்ட துணிச்சலான செயல்களை புரிந்த பொது மக்கள் மற்றும் அரசு பணியாளர்களுக்கு அண்ணா பதக்கம் பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் உயிர்கள், பொது சொத்துக்களை காப்பாற்றுதல் உள்ளிட்ட துணிச்சலான செயல்களை புரிந்த பொது மக்கள் மற்றும் அரசு பணியாளர்களுக்கு அண்ணா பதக்கம் பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

துணிச்சலுடன் உயிரை காப்பாற்றுதல், அரசு பொது சொத்துக்களை காப்பாற்றுதல் மற்றும் இதர துணிச்சலான செயல்களை புரிந்த பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்களுக்கு அண்ணா பதக்கம் வருகின்ற 2021ம் வருடம் ஜனவரி 26 அன்று குடியரசு தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தில் துணிச்சலான செயல்களை புரிந்த பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம். (காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புத்துறை, இராணுவத்தினர் விண்ணப்பிக்க இயலாது). விண்ணப்பங்கள் மற்றும் இதர விவரங்கள் பெற இணைய தள முகவரியான http://awards.tn.gov.in/ என்ற மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம்.

மேலும் பூர்த்தி செய்து விண்ணப்பங்கள் மற்றும் கையேடுகளை 21.11.2020க்குள் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு அலுவலகத்தில் நேரில் சமர்பிக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**